சமூக ஊடகக் குழுவில் சேருங்கள்

ஒரே மாதிரியான ஆர்வங்கள் உள்ள பிற மூத்தோர்களின் குழுவைக் கண்டறிவதற்கு ஃபேஸ்புக் ஒரு பயன்மிக்க வளமாக இருக்கும். நண்பர்களுடன் ஒன்றுகூடலுக்கு ஏற்பாடு செய்ய நீங்கள் திட்டமிடுவதற்கும் உதவியாக இருக்கும்.



தன்னார்வக் குழுவைத் தேடுதல்

தீவின் மக்கள்தொகையில் 70%-க்கு மேற்பட்டவர்கள் சமூக ஊடகத்தில் இருப்பதால், உங்களுக்கு ஆர்வமுள்ள குழுக்களை நீங்கள் நிச்சயமாகக் கண்டறியலாம்.

உங்கள் ஃபேஸ்புக் செயலியில், இடதுபுறம் மேல்பகுதிக்கு அருகில் உள்ள **பூதக்கண்ணாடி சின்னத்தின் மீது தட்டி** உங்கள் தேடலைத் தொடங்கலாம். பிறகு, நீங்கள் கண்டறிய ஆர்வமாக இருக்கும் **ஆர்வக் குழுவைத் தட்டச்சு செய்யவும்**.

எடுத்துக்காட்டாக, மீன்பிடிக்கச் செல்ல விரும்புவோரை அல்லது உங்களுடன் மீன்பிடிக்கத் துணையாக வரக்கூடியவர்களை நீங்கள் கண்டறிய விரும்பினால், "ஃபிஷ்ஷிங் சிங்கப்பூர்" எனத் தேடல் செய்து சிங்கப்பூரிலுள்ள மீன்பிடிக்கும் குழுக்களைக் கண்டுபிடிக்கலாம்.

அடுத்து, உங்கள் தேடல் முடிவுகளை வடிகட்ட தேடல் பட்டியின் கீழே உள்ள **'குழுக்கள்'** மீது தட்டவும். நீங்கள் குழுக்கள் வழியாக உருட்டிச்சென்று, உங்கள் ஆர்வத்திற்கு மிகவும் பொருத்தமான ஒரு குழுவைத் தட்டலாம். பிறகு, "ஜாயின் குரூப்பை" தட்டவும்.

சில குழு நிர்வாகிகள் உங்களை உறுப்பினராக அங்கீகரிப்பதற்கு முன் சில கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிக்க வேண்டியிருக்கலாம். ஆனால் கவலை வேண்டாம், பெரும்பாலான செயல் குழுக்கள் ஒரே நாளுக்குள் ஒப்புதல் அளித்துவிடும்.

ஒரு நிகழ்வினை ஏற்பாடு செய்தல்



பிரதான பக்கத்தின் **மேல் வலதுபுறத்தில் மூன்று வரிகளைக்** கொண்ட பொத்தானைத் தட்டவும், பின்னர் 'நிகழ்வுகள்' என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

அடுத்து, மேலே உள்ள பட்டியலிலிருந்து **'உருவாக்கு'** என்பதைத் தேர்ந்தெடுத்து, பின்னர் **'நிகழ்வை உருவாக்கு'** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

மேல் பட்டியலில் **'தனியுரிமை'** என்பதைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் **உங்கள் நிகழ்வைத் தேர்ந்தெடுக்கப்பட்டோருடன்** நடத்தலாம், அல்லது பெரிய விருந்துக்கு உங்களிடம் இடமிருந்தால் **'பொது'** என்பதைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் **உங்கள் நிகழ்வை அனைவருக்கும் திறந்துவிடலாம்**. நிகழ்வின் புகைப்படம், நேரம், அமைவிடம், நிகழ்வு விவரங்கள் போன்ற மீதி விவரங்களை நிரப்பவும். பின்னர், **உங்கள் நிகழ்வை உருவாக்கி முடிக்க 'உருவாக்கு'** என்பதைத் தட்டவும்.

நிகழ்வு பக்கத்தில், 'அழைக்கவும்' தெரிவைத் தட்டி, உங்கள் ஃபேஸ்புக் நண்பர் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுத்து, உங்கள் நண்பர்களையும் குடும்பத்தினரையும் ஃபேஸ்புக்கில் அழைக்கவும்.

நீங்கள் ஃபேஸ்புக்கை தொடர்ந்து ஆராய இது உங்களுக்கு உதவியாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்!

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

SG:D | GET READY!
SILVER INFOCOMM